TNTP010042862025

**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**
**<u>திருச்சிராப்பள்ளி</u>**

முன்னிலை : **திரு.S.கோபிநாதன், பி.எஸ்.சி, பி.எல்.,**
இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி

2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 13 ம் நாள் திங்கட்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண்.205/2025</u>**

**<u>CNR.No. TNTP01-004286-2025</u>**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | | அரசுக்காக காவல் ஆய்வாளர்<br>தில்லைநகல் காவல் நிலையம்<br>குற்ற எண்.323/2022 |
| குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர் | | **<u>எதிரிகளின் விவரம்:</u>**<br>1. சையது முஸ்தஃபா (எ) குடி த/பெ சித்திக்,<br>வயது 30/2022,<br>எண்.275, சின்னசாமி நகர்,<br>ஆழ்வார் தோப்பு, தென்னூர்,<br>திருச்சிராப்பள்ளி.<br>2. ஷாஜகான் த/பெ முகமது இக்பால்,<br>வயது 31/2022,<br>எண்.45, ஆழ்வார் தோப்பு,<br>தென்னூர்,<br>திருச்சிராப்பள்ளி.<br>3. முகமது ரபிஃக் (எ) பென்சில் (இறப்பு) |
| சம்பவ நாள் | | 16.05.2022 |
| புகார் நாள் | | 17.05.2022 |

| | | |
|---|---|---|
| எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | | 18.05.2022 |
| எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு பிரிவுகள் | : | 1வது எதிரி மீது இதச பிரிவு 294(b), 323, 307 ன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவு 294(b), 323, 307, 506(2)ன் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் பதிலுரை | & | குற்றவாளிகள் இல்லை. |
| தண்டனை அல்லது உத்தரவு | & | அரசு தரப்பானது 1வது எதிரி மீது இதச பிரிவு 294(b), 323, 307 ன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவு 294(b), 323, 307, 506(2)ன் கீழும் முற்றிலும் நிரூபிக்க தவறிவிட்டது என முடிவு செய்து 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என கு.வி.மு.ச பிரிவு 235(1)ன் கீழ் தீர்மானித்து விடுதலை செய்து உத்தரவிடுகிறேன். |
| வழக்கு சொத்திற்கான உத்தரவு | | இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சா.பொ.1 கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடுகிறேன். |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 13.07.2026 தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.A.பாலசுப்பிரமணியன், அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.A.ஓம்பிரகாஷ் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.4, திருச்சிராப்பள்ளி நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.13/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் மேல்விசாரணைக்காக திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, இவ்வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக 03.07.2025ம் தேதியன்று அனுப்பப்பட்டது.

1. **<u>இவ்வழக்கின் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு : –</u>**

அரசு தரப்பு வழக்கானது, கடந்த 16.05.2022ம் தேதி 22.00 மணியளவில் புகார்தாரர் மாலிக் பாட்ஷா (எ) மோரி பாட்ஷா ஆழ்வார் தோப்பில் உள்ள ரஹிம் ஹோட்டலுக்கு சென்றுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்ட 1வது எதிரி குடி (எ) சையது முஸ்தபா, 2வது எதிரி ஷாஜகான் மற்றும் 3வது எதிரி பென்சில் (எ) முகமது ரபிக் ஆகியோர் அந்த இடத்தில் புகார்தார்ரை கொலை செய்யும் பொதுவான நோக்கத்துடன் இருந்ததாகவும், குற்றம் சாட்டப்பட்ட 1வது எதி குடி (எ) சையது முஸ்தபா, புகார்தாரர் மாலிக் பாட்ஷா (எ) மோரி பாட்ஷாவை கொலை செய்யும் நோக்கத்துடன் அவர் தனது சட்டைப்பையில் கொடிய ஆயுதமான கத்தியை மறைத்து வைத்திருந்ததாகவும், அதே பரிவர்த்தனையின்போது குற்றம் சாட்டப்பட்ட 1வது எதிரி குடி (எ) சையது முஸ்தபா 2வது எதிரி ஷாஜகான் மற்றும் 3வது எதிரி பென்சில் (எ) முகமது ரபிக் புகார்தாரரை பார்த்து அவமானம் படுத்தும்

நோக்கத்துடன் அவர்கள் பொது இடத்தில் உனக்கு அவ்வளவு திமிராடா தேவடியா பயலே என திட்டியுள்ளதாகவும், மேலும் குற்றம் சாட்டப்பட்ட 2 வது எதிரி ஷாஜகான் மற்றும் 3 வது எதிரி பென்சில் (எ) முகமது ரபிக் புகார்தாரரை பிடித்துக் கொள்ள 1 வது எதிரி குடி(எ) சையது முஸ்தபா தனது கையில் இருந்த பட்டன் கத்தியால் இத்தோடு செத்து ஒழிந்து போடா என்று சொல்லி இடது பக்க கழுத்திலும் இடது பக்க தோள்பட்டையிலும் மாறி மாறி கிழித்து காயப்படுத்தியுள்ளதாகவும், எனவே எதிரிகளில் 1 வது எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(பி), 307 IPC ன் படியும், 2, 3 எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(பி), 342, 34 r/w 307 IPC ன் படியும். தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக எதிரிகள் மீது தில்லைநகர் காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கானது முதலில் வழக்கு கோப்பானது முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.13/2023 ஆக குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.4 திருச்சிராப்பள்ளியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல் யாவும் கு.வி.மு.ச.207 ன்படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது 1 வது எதிரி மீது சட்டப்பிரிவு 294(b), 307 இதச–ன் கீழ் மற்றும் 2 வது எதிரி மீது சட்டப்பிரிவு 294(b), 342, 34 r/w 307 இதச ன் கீழான குற்றச்சாட்டு என்பதால், வழக்கு கோப்பினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டது. மேலும், இந்த வழக்கு கோப்பானது மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.205/2025 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கானது 30.07.2025 ம் தேதியன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

3. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் கு.வி.மு.ச பிரிவு 226ன் கீழ் அரசு தரப்பில் வழக்கு சங்கதிகள் குறித்து அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கை திறந்து வைத்தார். இரு தரப்பும் கேட்கப்பட்டு, இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக தகுந்த முகாந்திரம் இருப்பதால் கு.வி.மு.ச பிரிவு 227 உ/இ பிரிவு 228ன் படி 1வது எதிரி மீது இதச பிரிவு 294(b), 323, 307 ன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவு 294(b), 323, 307, 506(2)ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

4. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின் எதிரிகளிடம் அரசு தரப்பு, குற்றம் பற்றி விளக்கி கேட்டபோது குற்றத்தை மறுத்தரைத்தார்கள். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

5. அரசு தரப்பில் தனது வழக்கினை மெய்பிக்க வேண்டி **அ.சா.1** முதல் **அ.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், **அ.த.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் மற்றும் **சா.பொ.1** வரையிலானவை குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் எதையும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>6. அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:</u>**

6.1) அ.சா.1 மாலிக்பாட்ஷா தனது சாட்சியத்தில் நான் தற்போது தென்னூர் ஆழ்வார் தோப்பில் குடியிருந்து வருகிறேன். நான் லோடுமேனாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு சாப்பாடு வாங்க சென்றேன். அங்கு கூட்டமாக இருந்தது. மூன்று பேர்கள் சேர்ந்து என்னை தள்ளிவிட்டார்கள். நான் கீழே விழுந்து மண்டை உடைந்து ரத்தமாக வந்தது.

பிறகு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து செல்லப்பட்டேன். அங்கு தில்லை நகர் போலீசார் வந்து என்னை விசாரித்து கையெழுத்து வாங்கி சென்றார்கள்.

அந்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1** ஆகும். ஆனால் என்னுடைய தோள் பட்டையிலும், இடது கழுத்திலும் கத்தி கீறல் இருந்ததை நான் பார்த்தேன். என்னை போலீசார் விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 யாசிக் தனது சாட்சியத்தில் நான் தற்போது தென்னூர் ஆழ்வார் தோப்பில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1–யை எனக்கு தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இரவு சுமார் 10.00 மணியளவில் ஆழ்வார்தோப்பில் உள்ள போலீஸ் புறக்காவல் நிலையம் முன்பு நின்று கொண்டிருந்தேன். அ.சா.1 அடிபட்டு கீழே கிடந்தார். அவரை எண்.108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவர் மேல் உள்ள காயம் கிழிந்த நிலையில் இருந்தது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 மற்றும் அ.சா.4 தங்களது சாட்சியத்தில் நான் தற்போது தென்னூர் ஆழ்வார் தோப்பில் குடியிருந்து வருகிறேன். சுமார் 4 வருடத்திற்கு முன்பாக போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து போட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6.4) அ.சா.5 வேல்முருகன், காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் நான் தற்போது காவல் துறை பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இந்த

வழக்கு புலன் விசாரணை அதிகாரி நான்தான். கடந்த 17.05.2022–ம் தேதி இந்த வழக்கில் அ.சா.1–யிடம் புகார் வாக்குமூலம் பெற்று இதச பிரிவுகள் 294(பி), 323,307 கீழ் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 ஆகும். சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்து தயார் செய்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3. வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆகும். 1–வது எதிரியை கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து கைப்பற்றிய கத்தி சா.பொ.1. அதற்கான மகஜர் அ.த.சா.ஆ.5.

எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அரசு மருத்துவரை விசாரித்து பெற்ற விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.6. அ.சா.1 க்கான காயச்சான்று அ.த.சா.ஆ.7. மின்வாரிய துறை அலுவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்து கொள்ளப்பட்டது.

7) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார்கள். எதிரி தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான குற்றசாட்டு எல்லாவித நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதுதான்.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**<u>தீர்வு:-</u>**

இந்த வழக்கில் 1 முதல் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகிய சாட்சிகள் எதிரிகளுக்கு எதிராக எந்தவித சாட்சியங்களும் அளிக்கவில்லை.

மேலும் அ.சா.5 புலன் விசாரணை அதிகாரி ஆவார். இவர் 1–வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலத்தை வாங்கியதை தவிர வேறு எதுவும் புலன் விசாரணையில் கண்டுபிடிக்கவில்லை. 1–வது எதிரியிடமிருந்து கத்தியை கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

கத்தி எங்கிருந்து வந்தது என்பது பற்றி விசாரணை எதுவும் செய்யப்படவில்லை. கத்தியை தடய ஆய்வுக்கு உட்படுத்தி அதில் உள்ள கைரேகை பதிவு பற்றி விசாரணை செய்யப்படவில்லை. சம்பவ இடத்தில் இருந்து சிசிடிவி பதிவுகளை கைப்பற்றி விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை சான்றூட்டும்படி எந்த சாட்சியமும் சாட்சியம் அளிக்கவில்லை.

<u>முடிவாக,</u>

அரசு தரப்பானது 1வது எதிரி மீது இதச பிரிவு 294(b), 323, 307 ன் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவு 294(b), 323, 307, 506(2)ன் கீழும் முற்றிலும் நிரூபிக்க தவறிவிட்டது என முடிவு செய்து 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என கு.வி.மு.ச பிரிவு 235(1)ன் கீழ் தீர்மானித்து விடுதலை செய்து உத்தரவிடுகிறேன்.

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சா.பொ.1 கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடுகிறேன்.

இத்தீர்ப்புரை என்னால் நேரிடையாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் **2026–ம் வருடம் ஜூலை மாதம் 13**–ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
தேதி : 13.07.2026

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | மாலிக் பாட்ஷா |
| அ.சா.2 | யாசிக் |
| அ.சா.3 | சையது ஹவுஸ் |
| அ.சா.4 | சர்புதீன் |
| அ.சா.5 | வேல்முருகன், காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | – | புகார் |
| அ.த.சா.ஆ.2 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.3 | – | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.4 | – | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.5 | – | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.த.சா.ஆ.6 | – | விபத்து பதிவேடு |
| அ.த.சா.ஆ.7 | – | காயச்சான்றிதழ் |

**<u>சான்று பொருட்கள்</u> :–**

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | – | கத்தி |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>** இல்லை.

GOPINATHAN S Digitally signed by GOPINATHAN S

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி : 13.07.2026